தினகரன் 20/11/17

## டிஎன்பிஎல் சார்பில்

# மரக் கன்றுகள் நடும் விழா



டிஎன்பிஎல் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுசூழல் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் மரக் கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

க.பரமத்தி, நவ.20: டிஎன்பிஎல் சார்பில் சுற்றுசூழல் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பல்லுயிர்ப் பூங்காவில் மரக்கன்றுகள் நடும்விழா நடைபெற்றது.

கரூர் ஒன்றியம் காகிதபுரம் பேரூராட்சியில் டிஎன்பிஎல் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவன குடியிருப்பு வளாகத்தில் கடந்த 15ம் தேதி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் விதமாக பல்லுயிர்ப் பாதுகாப்பு நீர்வளம் பாதுகாப்பு, மரக் கன்றுகள் நடுவது மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய தலைப்புகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது. இதன் தொடக்க விழாவிற்கு துணை மேலாண்மை இயக்குனர் வெள்ளியங்கிரி வரவேற்றார்.

கூடுதல் காவல்துறை இயக்குனரும் தலைமை விழிப்புணர்வு அதிகாரி அபயகுமார்சிங், இயக்குனர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். டிஎன்பிஎல் மேலாண்மை இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்து பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

டிஎன்பிஎல் பப்ளிக் பள்ளி மற்றும் மெட்ரிக் பள்ளி, ஐடிஐ ஆகியவற்றில் பயின்று வரும் சுமார் 1800க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பல்லுயிர்ப் பூங்காவில் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையில் 2000 மரக் கன்றுகள் நடப்பட்டது.